**செய்தி வெளியீடு எண்: 697** **நாள்: 29.09.2018**

# செய்தி வெளியீடு

## தொழில் துறையில் தொடர்ந்து பீடுநடை போட்டு முன்னேறும் தமிழகம்

இந்தியாவில் தொழில் துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாகிய தமிழகத்தில் தொழில் முதலீடுகளை மேலும் பெருக்கும் வண்ணம் உலக அளவில் தமிழகத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து பல்வேறு நாட்டு தொழில் நிறுவனங்களும், நம் நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களும் தமிழகத்தில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக தமிழக அரசால் உலக முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்படுகின்றன. உலக முதலீட்டாளர்களின் முதல் மாநாடு கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்றது.

ஒரு லட்சம் கோடி அளவிலான முதலீடுகளை ஈர்க்கவேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும், தமிழக அரசின் சிறப்பான முயற்சிகளால் இலக்கினை விஞ்சி ரூபாய் 2,42,160 கோடி அளவிலான தொழில் முதலீடுகள் அம்மாநாட்டின் மூலம் ஈர்க்கப்பட்டது. இம்முதலீடுகள் மூலம் பெரும் தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்பம், கைத்தறி மற்றும் துணிநூல் துறை, வேளாண் துறை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மொத்தம் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் ரூபாய் 16,532 கோடி முதலீட்டில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தகளும் கையெழுத்திடப்பட்டன. தமிழக அரசின் குழுவினர் பல்வேறு இந்திய நகரங்களிலும்

உலக நாடுகளிலும் சென்று நடத்திய பல்வேறு பேச்சு வார்த்தைகள், கூட்டங்கள் உள்ளிட்டவை இம்மாநாட்டின் வெற்றிக்குப் பெரும் துணையாக நின்றன.

நாம் சிறிய அளவில் ஒரு வீட்டைக் கட்டும் போது கூட நிலம் பார்த்து முடிவு செய்வது முதல், கட்டி முடித்து குடிபுகுவது வரை குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது ஆகும். அதுபோலவே கோடிக்கணக்கில் முதலீடு செய்யும் நிறுவனங்கள் தொழில் துவங்க ஒப்பந்தம் செய்து உற்பத்தியைத் துவங்க மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வரை கூட ஆகிறது. இந்த கால அளவினைக் கருத்தில்கொண்டே தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. அதே போல, வீட்டின் மீது செய்யும் முதலீடானது நிலம், அடித்தளம், கட்டுமானம் என பல கட்டங்களாக படிப்படியாக குறிப்பிட்ட கால இடைவெளியில் மேற்கொள்ளப்படும். தொழில் முதலீடுகளும் அவ்வாறே என்பது தொழில்கள் பற்றி அறிந்தோர் அனைவரும் அறிந்திட்ட உண்மையே.

இவ்வாறான சூழலில் கடந்த முதலீட்டாளர் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்ட 98 பெரும் தொழில் நிறுவனங்களில் ரூ.62,738 கோடி அளவிலான முதலீடுகளை செய்ய ஒப்பந்தம் செய்த 68 நிறுவனங்கள் ஏற்கெனவே தமது பணிகளைத் தொடங்கி அவை பல்வேறு நிலைகளில் உள்ளன. இதன்மூலம் சுமார் 1,10,027 நேரடி வேலை வாய்ப்புகளும், இன்னும் பல லட்சம் மறைமுக வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன. கடந்த மாநாட்டில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் ஏதும் இடையூறுகள் / தாமதம்

ஏற்பட்டால் உடனுக்குடன் களையப்பட்டும் வருகின்றன. இதன் பயனாக **ஆம்வே (Amway), ஐடிசி (ITC), கெஃப் (KEF), லோட்டஸ் காலணி தொழிற்சாலை (Lotus Foot wear) போன்ற பல்வேறு நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கியுள்ளனர். MRF டயர், அப்போலோ டயர் (Apollo Tyres), செயின்ட் கோபேன் (Saint Gobain), டிவிஎஸ் (TVS), சாம்சங் (Samsung) ஆகிய நிறுவனங்களும் விரிவாக்கம் செய்து உற்பத்தியைத் தொடங்கியுள்ளனர்.**

பிற மாநிலங்களில் நடைபெறும் முதலீட்டாளர் மாநாடுகளில் ஏற்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 5 முதல் 15 சதவீதம் வரை தான் தொழில்கள் துவங்கும் நிலை உள்ள சூழலில், தமிழகத்தில் மட்டுமே வெறும் மூன்று ஆண்டுகளில் 25 சதவீதத்திற்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்ததாரர்கள் தொழிற்சாலைகளை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த சிறப்பான செயல்பாட்டுக்கு சிறந்த சான்றாக 2000 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 27,953 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அந்நிய நேரடி முதலீடாக தமிழகம் வந்துள்ளதாகவும், அதில் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை மட்டும் 17,946.15 மில்லியன் அமெரிக்க டாலர் வந்துள்ளதாகவும், அதிலும் குறிப்பாக உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெற்ற 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை 11,963.55 மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் புள்ளிவிவரங்களே அமைந்துள்ளன. இப்புள்ளிவிவரங்களைப் பார்க்கையில், 2000-2012 வரை 12

ஆண்டுகளில் வந்த முதலீடுகளைக் காட்டிலும், உலக முதலீட்டாளர் மாநாடு நடந்த பிறகு கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் வரப்பெற்ற வெளிநாட்டு முதலீடுகள் மிக அதிகம் என்பது தெளிவாகத் தெரிகிறதே!

முதல் மாநாட்டின் வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தின் சிறப்புகளை உலகறியச் செய்யும் முகமாகவும், மேலும் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் விதமாகவும் உலக முதலீட்டாளர்களின் இரண்டாம் மாநாட்டினை வரும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் ஒருபகுதியாக இந்தியாவின் பல்வேறு முக்கிய நகரங்களிலும், வெளிநாடுகளிலும், தமிழகத்தில் நிலவி வரும் சிறப்பான தொழில் சூழலையும், நிர்வாகத்தையும் பாரோர் காணும் வகையில் கருத்தரங்குகள், தொழில் சந்திப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் தொழில்முனைவோர் பெருமளவில் பங்குபெற்று தமிழகத்தில் தொழில் துவங்க ஆர்வம் காட்டுகின்றனர். பல்வேறு வெளிநாடுகளிலும் தமிழகக் குழுவினர் அந்நாடுகளின் அமைச்சர்கள், பெரும் தொழில் கூட்டமைப்புகள் மற்றும் நிறுவனங்களை சந்தித்து தமிழகத்தின் சிறப்புகளை எடுத்துரைத்து தொழில் தொடங்க அழைப்பு விடுத்து வருகின்றனர். வரவிருக்கும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடவும், தொழில் துவங்கிடவும் பலரும் விருப்பம் தெரிவித்து, இதுவரை மோட்டார் வாகன உற்பத்தி, உதிரி பாக உற்பத்தி, மோட்டார் வாகன உற்பத்தி ஆராய்ச்சி, பெட்ரோலிய சுத்திகரிப்பு, கண்ணாடி

இழை உற்பத்தி, வாகன டயர் உற்பத்தி, ஜவுளி மற்றும் நூற்பாலைகள், தகவல் தொழில் நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் முதலீடு செய்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர். அதிலும் குறிப்பாக சியட் டயர் (CEAT Tyres) தயாரிப்பு நிறுவனம் 4,000 கோடி ரூபாய் அளவிற்கு தமிழகத்தில் முதலீடு செய்திட மாண்புமிகு முதல்வர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது வரவிருக்கும் முதலீட்டாளர்கள் மாநாட்டின் முதல் வெற்றி. உள்நாட்டு முதலீடுகளில் குஜராத் மாநிலத்தில் இருந்து மட்டும் 20,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் தமிழகத்தில் செய்யப்பட உள்ளன.

இவை தவிர, வெளிப்படையான வகையில் விரைந்து தொழில் அனுமதிகளை வழங்கிடும் பொருட்டு தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கணினி வழி ஒற்றைச் சாளர முறையானது தொழில் முனைவோரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தமிழகத்தைப் போன்றே இராஜஸ்தான், உத்திரகாண்ட், குஜராத், ஆந்திர பிரதேசம், மேற்கு வங்கம், ஒடிசா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களும் இது போன்ற முதலீட்டாளர் மாநாடுகளை நடத்துகின்றனர். அம்மாநில அரசு அலுவலர்கள் குழுவினரும் உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று முதலீட்டாளர்கள் பலரையும் பல்வேறு நாடுகளில் சந்திக்க செல்கின்றனர். இவ்வாறு நம்மைச் சுற்றியுள்ள மாநிலங்கள் பலவும் முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்கும்பொழுது, சிறப்பான தொழில் சூழலையும், சீரிய நிர்வாகத்தையும் கொண்டுள்ள தமிழகம், மேலும் உயர்வு

பெறும் பொருட்டு உலக முதலீடுகளை ஈர்க்க எடுத்துள்ள பல நடவடிக்கைகளில் ஒன்றே உலக முதலீட்டாளர்கள் மாநாடு. தமிழகத்தின் சிறப்பைக் கூறும் பல சமீபத்திய புள்ளிவிவரங்களில் ஒன்றாகிய National Council of Applied Economic Research (NCAER) நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு புள்ளி விவரத்தில் தொழில் துவங்க டில்லிக்கு அடுத்த சிறந்த மாநிலமாக தமிழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதிலும் அரசு நிர்வாகம், சுகாதாரம் மற்றும் கல்வி, சட்டம் ஒழுங்கு, சிறப்பான மனித வளம் உள்ளிட்ட இனங்களில் தமிழகமே இந்தியாவின் சிறந்த மாநிலம் என அறுதியிட்டு கூறப்பட்டுள்ளது.

இயற்கையின் கொடையால் அமையப்பெற்ற கடற்கரைகள், அதில் அமைந்துள்ள நான்கு பெரிய மற்றும் 22 சிறு துறைமுகங்கள், 4 சர்வதேச விமான நிலையங்கள், 2 உள்நாட்டு விமான நிலையங்கள், உலகின் மிகப்பெரும் தொழில் நிறுவனங்களாகிய பார்ச்சூன் 500 (Fortune 500 Companies) நிறுவனங்களில் 61 நிறுவனங்கள், மிக சிறந்த கல்வியும், திறமையும் கொண்ட இளைஞர்கள், 2 இலட்சம் கிலோமீட்டருக்கு மேற்பட்ட சாலைகள், சுமார் 125 சதவீதம் அளவிலான தொலை தொடர்பு அடர்த்தி, மிகை மின் உற்பத்தி, இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டலங்கள், திறன்மிக்க தொழிலாளர்கள், இந்தியாவிலிருந்து செய்யப்படும் ஏற்றுமதியில் கணிசமான பங்கு, இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 சதவீதம் பங்கு,

இந்திய தொழில் உற்பத்தியில் 10 சதவீதம் அளவில் பங்கு, ஒரு நிமிடத்திற்கு மூன்று கார்கள் உற்பத்தி என்பன தமிழகத்தின் குறிப்பிடத்தக்க சிறப்புகள் ஆகும்.

தேமதுர தமிழோசையை மட்டுமல்ல, உழவிலும் தொழிலிலும், கல்வித் தரத்திலும் சிறந்து விளங்கும் தமிழர் மாண்பையும் உலகறியச் செய்து, தமிழகம் தொழில் துறையில் தொடர்ந்து பீடுநடை போடவும், வளர்ச்சிப் பாதையில் நாளும் புதிய இலக்குகளை அடைந்திடவும் அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு முத்தாய்ப்பாக அமையவுள்ள நிகழ்வே தமிழ்நாடு அரசு வரும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் நடத்தவுள்ள உலக முதலீட்டாளர்களின் இரண்டாம் மாநாடு.

தமிழக அரசின் சீரிய முயற்சிகளாலும், தொழில் முனைவோர் தமிழகத்தின் மீது காட்டி வரும் நம்பிக்கையாலும் இந்த இரண்டாம் மாநாடும் முந்தைய மாநாட்டைப் போலவே பெரும் வெற்றியை அடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**எம்.சி.சம்பத்**
**தொழில் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**